www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப் பருவத்தேர்வு - 2022

**11** - ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I பலவுள் தெரிக.** 8 X 1 = 8

1. **பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.**

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்

i) அஆ ii) ஆஅ iii.) ஆஈ iv) அஇ

2. பாயிரம் இல்லது .......................... அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

3. வாழ்வு என்பது .......................... பாடுபொருள்.

அ) காவியத்தின் ஆ) இலக்கணத்தின் இ) கவிதையின் ஈ) அணியின்

4. "புல்லின் இதழ்கள்" எனும் நூலின் ஆசிரியர்

அ) வால்ட் விட்மன் ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே
இ) பாப்லோ நெருடா ஈ) எர்னஸ்ட் காசிரர்

5. மண்ணுக்கு வளம் சேர்ப்பன

அ) மண்புழு ஆ) ஊடு பயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

6. Chemical Fertilizers - கலைச்சொல் தருக.

அ) வேதி உரங்கள் ஆ) தொழு உரங்கள் இ) அறுவடை ஈ) ஒட்டு விதை

7. மொழி முதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம் கிண்ணம் ஆ) டமாரம் இங்ஙனம்
இ) ரூபாய் இலட்சாதிபதி ஈ) றெக்கை அங்ஙனம்

8. செங்கயல் - இலக்கணகுறிப்பு தருக.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) எண்ணுமை ஈ) உருவகம்

**II அ. கீழ்வரும் குறுவினா ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 X 2 = 2

9. பாயிரம் பற்றி நீவிர் அறியும் கருத்து யாது?
10. 'ஏதலியாக்குருவிகள் எங்கே போயின' - இத்தொடரின் பொருள் யாது?

**ஆ. கீழ்வரும் குறுவினா ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 X 2 = 2

11. பேச்சு மொழி எழுத்து மொழியைக்காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
12. பூச்சிக்கொல்லி பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?

**இ. குறுவினா எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

13. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?
14. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*** குரை, குறை
15. கலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும் - ***பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.***



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

III அ. சிறுவினா. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி. 1 X 4 = 4

16. ‘சசை வாயிலின் செங்கயல் பாயும்’ - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

17. ஐங்குறுநூறு பாடல் சுட்டும் திணை முதற்பொருள் கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

ஆ. சிறுவினா. ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக. 1 X 4 = 4

18. ‘என்னுயிர் தமிழ்மொழி என்பேன்’ - என்னும் தலைப்பில் நீவிர் கொண்ட மொழிப்பற்றை விளக்குக.

19. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?

இ. ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக. 1 X 4 = 4

20. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்தெழுதுக.

மீன்கள் கோடி கோடிசூழ வெண்ணிலாவே ஒரு
வெள்ளிஓடம்போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைப்போல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே!
நீயும் பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே! - கவிமணி

21. தமிழாக்கம் தருக.

அ) The pen is mightier than the sword.

ஆ) Winners don't do different things; they do this differently.

இ) A picture is worth a thousand words.

ஈ) Knowledge rules the world.

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3 X 6 = 18

22. அ) நன்னூல் பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**

ஆ) நகரங்களின் பெருக்கமும் பறவையினங்களின் அழிவும் - காரணங்களுடன் வகுப்பறையில் விவாதிக்க.

23. அ) நீங்கள் பேச்சுமொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க. **(அல்லது)**

ஆ) இணையத்தளம் மூலம் மாடிதோட்டம் அமைக்கும் முறையை அறிந்து வகுப்பில் கலந்துரையாடுக.

24. அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடு அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எங்ஙனம் பொருந்துகிறது? **(அல்லது)**

ஆ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

V மனப்பாடப் பகுதி. 4

25. "ஓடு தொடங்கி ........" எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com